நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## விவசாயிகளின் வாழ்வாதாரப் பணிகள் அனைத்துக்கும் இலவச மின்சாரம்

விவசாயத்துக்கு மட்டுமல்லாமல் விவசாயிகளின் வாழ்வாதாரப் பணிகள் அனைத்துக்கும் இலவச மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், அவர்களின் வீட்டில் கூடுதல் கட்டுமானப் பணிகளுக்கு சாதாரண கட்டணத்திலேயே மின்சாரம் வழங்கவும் அனுமதி அளித்துள்ளது. மேலும், மின் வாரியம் கோரியிருந்த விவசாயம் மற்றும் குடிசைப் பயன்பாட்டு மின்சாரத்துக்கான கட்டண உயர்வுக்கும் அனுமதியளித்து ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தாழ்வழுத்த குடிசை வகை பயன்பாட்டு மின்சாரத்துக்கான மாத நிலைக் கட்டணத்தை ரூ. 60-லிருந்து ரூ. 125-ஆக அதிகரிக்கவும், தாழ்வழுத்த விவசாய வகைப் பயன்பாட்டு மின்சாரத்துக்கு ஆண்டு நிலைக் கட்டணத்தை ரூ. 1,750-லிருந்து ரூ. 2,500-ஆக உயர்த்தவும் பரிந்துரைத்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் கடந்த பிப்ரவரி 19-ஆம் தேதி மின் வாரியம் மனு செய்திருந்தது.

மேலும், இந்தக் கட்டண உயர்வால் ஏற்படும் கூடுதல் கட்டண சுமை நுகர்வோர் மீது திணிக்கப்பட மாட்டாது. அதை அரசே மானியமாக வழங்கும். இந்த இரு பிரிவினருக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும் என்றும் மின் வாரியம் தெரிவித்திருந்தது.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட ஆணையம், கடந்த மே மாதம் சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டங்களை நடத்தி, மனுக்களையும் பெற்றது. இந்தக் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளும், பொதுமக்களும் ஆணையத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

விவசாயிகள் தங்களுடைய வாழ்வாதார வேளாண்மை தொடர்பான பணிகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தினால், அதிகாரிகளால் மின் திருட்டு வழக்கு தொடுக்கப்படுகிறது என்று புகார் தெரிவித்தனர்.

இதுபோல் வீட்டில் சிறிய கட்டுமானங்களுக்காக பயன்படுத்தும் மின்சாரத்துக்கும், குடியிருப்புக் காலனிகளில் பொது வசதிகளுக்காக பயன்படுத்தும் மின் பயன்பாட்டுக்கும்

மின் திருட்டு வழக்கு போடப்படுவதாக வீட்டுஉபயோக மின் நுகர்வோர் புகார் தெரிவித்தனர்.

இந்த மனுக்கள் மற்றும் கோரிக்கைகளை பரிசீலித்த ஆணையம் இப்போது அதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது. அதுகுறித்த விவரம்:

மின் வாரியம் பரிந்துரைத்த விவசாயம் மற்றும் குடிசைகளுக்கான மின் கட்டண உயர்வை ஆணையம் அப்படியே ஏற்றுக்கொள்கிறது. இதன் மூலம் மின் வாரியத்துக்கு ரூ.964 கோடி வருவாய் கிடைக்கும்.

இலவச மின்சாரம்: மேலும், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று விவசாயப் பணிக்கு மட்டுமல்லாமல், வைக்கோல் மற்றும் தட்டு வெட்டும் இயந்திரத்தை இயக்குவதற்கு, கரும்பு பிழிதல் என்பன உள்ளிட்ட அவர்களுடைய வாழ்வாதரப் பணிகளுக்கும் இலவச மின்சாரத்தை, ஒருவழிப் பாதை மின் இணைப்பு மாற்றி மூலம் பயன்படுத்த அனுமதித்து உத்தரவிட்டது.

இதுபோல், வீட்டு உபயோக நுகர்வோரின் கோரிக்கையை ஏற்று 2,000 சதுர அடிக்கு உட்பட்ட கூடுதல் கட்டுமானப் பணிகளுக்கு உபயோகிக்கும் மின்சாரத்துக்கு, வீட்டு உபோயகத்துக்கான சாதாரண மின் கட்டணமே வசூலிக்க உத்தரவிடப்படுகிறது.

குடியிருப்புக் காலனிகளில் குடியிருப்போரின் பொது வசதிக்காக பயன்படுத்தும் மின்சாரத்துக்கும் சாதாரண கட்டணமே விதிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

விளம்பரப் பலகைகள், விளம்பரக் காட்டிகளில் அபரிமிதமான விளக்கொளிக்காக பயன்படுத்தும் மின்சாரத்துக்கு மிக அதிக அளவிலான மின் கட்டணம் விதிக்கப்பட வேண்டும்.

மாற்றியமைக்கப்பட்ட இந்தக் கட்டணம் 21-6-2013 முதல் நடைமுறைக்கு வருகிறது. இது 31-3-2014 வரை நடைமுறையில் இருக்கும் என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

## *மலிவு விலை காய்கறிக் கடைகளுக்கு அமோக வரவேற்பு*



ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வரும் காய்கறி விலையைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு தொடங்கியுள்ள மலிவு விலை காய்கறி கடைகளுக்கு பொது மக்கள் அமோக வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

சில்லறை விற்பனைக் கடைகளைவிட 40 சதவீதம் விலை குறைவு என்பதால், முதல் நாளான வியாழக்கிழமை பிற்பகலுக்குள் பெரும்பாலான கடைகளில் உள்ள அனைத்து காய்கறிகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன.

டீசல் விலை உயர்வு, மழைக் குறைவு உள்ளிட்ட காரணங்களால் சில மாதங்களாக காய்கறிகளின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்து வருகின்றன. சமையலுக்கு அத்தியாவசியத் தேவையான சாம்பார் வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 120 வரை சென்று உச்சம் தொட்டது.

இந்த நிலையில் நடுத்தர மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 31 மலிவு விலை காய்கறிக் கடைகளை முதல்வர் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

விற்பனை எப்போது: இந்தக் கடைகளில் காலை 8 மணி முதல் 11 மணி வரையும், மாலை 4 மணி முதல் 7 மணி வரையும் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடை செயல்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் விற்பனைப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட முதல் நாளிலேயே மக்கள் ஆர்வத்துடன் காய்கறிகளை வாங்கிச் சென்றனர். மலிவு விலை காய்கறிக் கடைகளுக்கு வந்த பொது மக்கள் சிலர் தெரிவித்த கருத்துகள்:

விஜயலட்சுமி (குடும்பத் தலைவி - திருவல்லிக்கேணி): நாளுக்கு நாள் காய்கறிகளின் விலை உயர்வதால், மாத பட்ஜெட்டில் கூடுதல் செலவு ஏற்படுகிறது. இந்த நிலையில் நடுத்தர மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் விதமாக மலிவு விலை காய்கறி கடைகள் தொடங்கப்பட்டுள்ளன.

வெளிக் கடைகளில் விற்பதைவிட இங்கு கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.40 வரைக் குறைவாகக் கிடைக்கிறது. இதனால் அதிக அளவிலான காய்கறிகளை நான் வாங்கி செல்கிறேன்.

பாலசுப்ரமணியன் (தொழிலாளி - வடபழனி): அம்மா உணவகத்தைத் தொடர்ந்து, மலிவு விலை காய்கறி கடைகளைத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. இந்தக் கடைகளில் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்துக் காய்கறிகளும் கிடைக்கின்றன. கால தாமதம் இன்றி ஒரே இடத்தில் மலிவு விலையில் காய்கறிகள் வாங்கி செல்ல இந்தக் கடைகள் வசதியாக உள்ளன.

ஜெகதீசன் ( சினிமா லைட் பாய் - ராயப்பேட்டை): எனக்கு தினமும் ஊதியமாகக் கிடைக்கும் ரூ.300 வைத்துத்தான் குடும்பம் நடத்தி வருகிறோம். இந்த நிலையில் சமீப காலமாக காய்கறிகளின் விலை தாறுமாறாக உயர்ந்ததால், காய்கறிகள் வாங்குவதைக் குறைத்து கொண்டேன்.

தற்போது மலிவு விலைக் காய்கறிக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளது என்னைப் போன்ற நடுத்தர மக்களுக்கு பயனளிக்கும் விதமாக உள்ளது. இந்தக் கடைகளில் காய்கறிகள் ஃப்ரெஷ் -ஆகவும், விலை குறைவாகவும் உள்ளன.

இது குறித்து மார்க்கெட் வியாபாரி செüந்தரராஜன் கூறியது: மலிவு விலைக் கடைகள் மூலம் கோயம்பேடு மார்க்கெட் விற்பனை ஓரளவு பாதிக்கும் என்பது உண்மை. ஆனால் மக்களுக்கு பயனளிக்கும் இது போன்ற திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம்.

இந்தக் கடைகளுக்குத் தேவையான காய்கறிகளை கோயம்பேடு வியாபாரிகள் மொத்தமாக விநியோகம் செய்யவும் தயாராக இருக்கிறோம் என்றார் அவர்.

**ரூ.100-க்கு காய்கறி பை**

காலதாமதத்தைக் குறைக்கும் வகையில், தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, திருவல்லிக்கேணி, ராஜா அண்ணாமலைபுரம் உள்பட 11 டியூசிஎஸ் விற்பனைக் கடைகளில் ரூ.100-க்கு பல்வேறு காய்கறிகள் அடங்கிய பை வழங்கப்படுகிறது.

இந்தப் பையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம், அரைக் கிலோ தக்காளி மற்றும் உருளைக் கிழங்கு, கால் கிலோ கத்தரி, வெண்டை, பீன்ஸ், கேரட் உள்ளிட்ட காய்கறிகள் வழங்கப்படுகின்றன.

இதை தவிர தேங்காய், இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை ஆகியவையும் இலவசமாக காய்கறி பையுடன் வழங்கப்படுகின்றன. பொதுமக்களின் விருப்பத்தைப் பொருத்து ரூ.100 பையில் வாரம் ஒருமுறை காய்கறி வகைகளை மாற்றி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**காய்கறி விலை நிலவரம் (கிலோ - ரூபாயில்)**

உருளைக்கிழங்கு 20 30

பெரிய வெங்காயம் 20 30

சாம்பார் வெங்காயம் 60 100

கேரட் 40 50

பீன்ஸ் 50 65

நூக்கல் 15  25

சௌ சௌ  25 42

பீட்ரூட் 20 30

முட்டை கோஸ் 18 28

பச்சை மிளகாய் 30 40

இஞ்சி 140 190

சேனை 25 32

கத்தரிக்காய் 20 28

வெண்டைக்காய் 24 34

அவரைக்காய் 40 45

கோவைக்காய் 20 25

பாகற்காய் 25 45

தக்காளி (நாடு) 30 38

காலிபிளவர் 15 28

முருங்கைக்காய் 30 50

முள்ளங்கி 16 22

புடலங்காய் 25 32

கருணைக்கிழங்கு 30 45

சுரைக்காய் 10 22

மாங்காய் 15 25

வெள்ளிரிக்காய் 15 20

எலுமிச்சை 1.50 4

தேங்காய் 8 15

கொத்தமல்லி 6 10

வாழைக்காய் 5 8

### கரியும், கோதுமையும்

இந்திய நிலக்கரி நிறுவனம், அனல் மின்நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரி பற்றாக்குறையை இறக்குமதி மூலம் சமாளித்துக்கொள்ள அனுமதி அளித்துள்ளது "மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு'. இதன் மூலம் நிச்சயமாக மின் கட்டணம் ஒரு யூனிட்டுக்குக் குறைந்தது 15 காசுகள் உயரக்கூடும் - உடனடியாக அல்ல - என்று உறுதியாகச் சொல்லப்படுகிறது.

இந்தியாவில் நிலக்கரி ஒதுக்கீட்டில் முறைகேடு இல்லாமல் இருந்திருந்தால், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலக்கரிச் சுரங்க வயல்கள் செயல்படத் தொடங்கியிருந்தால் நிலக்கரி உற்பத்தி அதிகரித்திருக்கும். நிலக்கரி ஒதுக்கீட்டில் முறைகேடு அம்பலமானதால், சுமார் 89 நிலக்கரிச் சுரங்க வயல்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. இனி இந்த நிலக்கரி வயல்களுக்கான ஏலம் எப்போது நடைபெறும் என்று சொல்ல முடியாது. ஒருவேளை, அடுத்த ஆண்டு தேர்தல் முடிவுக்குப் பிறகு மறுஒதுக்கீடுகள் நடைபெறலாம்.

இந்திய நிலக்கரியின் எரிதிறன் குறைவு, சாம்பல் அதிகம் என்று சொல்லப்பட்டாலும்கூட, அதிக நிலக்கரி உள்நாட்டிலேயே கிடைக்கும்போது, இறக்குமதி செய்வதற்கான தேவை இருந்திருக்காது. ஆனால் இப்போது நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இதனால், மின் கட்டண உயர்வு தவிர்க்க முடியாததாக மாறுகிறது. இதற்குக் காரணம், மத்திய அரசின் தவறான முடிவுகள்தான். அரசு செய்யும் தவறுகளின் சுமையை மக்கள் பரவலாக ஏற்றுக்கொண்டாக வேண்டியிருக்கிறது.

2015, மார்ச் மாதம் முதல் 78,000 மெகாவாட் மின்உற்பத்தி இலக்கினை முன்வைத்து, தேவைப்படும் நிலக்கரிக்கு இப்போதே ஒப்பந்தங்கள் போட இந்திய நிலக்கரிக் கழகத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்திய நிலக்கரிக் கழகத்தால் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கும் முறையே 65%, 67%, 75% அளவுக்குத்தான் உள்நாட்டு தேவைக்கான நிலக்கரியை வழங்க முடியும். பற்றாக்குறையைச் சமாளிக்க இறக்குமதி செய்வதைத் தவிர வேறு வழியே கிடையாது.

சர்வதேசச் சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. சீனா போன்று பல ஆண்டுகளின் தேவைக்கு வெளிநாடுகளில் நிலக்கரி வயல்களை முன்னதாகவே குத்தகைக்கு எடுப்பதோ அல்லது முன்பதிவு செய்துகொள்வதோ இந்திய நிலக்கரிக் கழகத்துக்கு சாத்தியமில்லை.

அதிக விலை கொடுத்து நிலக்கரியை இறக்குமதி செய்யும்போது அனல் மின்நிலையங்களின் மின்உற்பத்திச் செலவு அதிகரிக்கும். ஆகவே மின்சாரத்தின் விலையை அவர்கள் உயர்த்துவார்கள். அதனை வாங்கி மக்களுக்கு விநியோகம் செய்யும் அரசு, இந்த விலையேற்றத்தை மின்கட்டணத்தில் உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை.

பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்ட அனல் மின்நிலையம் நிலக்கரி இல்லாததால் செயல்படாமல் இருப்பதைக் காட்டிலும், அதிக விலையில் நிலக்கரியை வாங்கி மின்உற்பத்தி செய்வது மேலானது. மின்சாரமே இல்லை என்பதைவிட, அதிக விலைக்கு மின்சாரம் கிடைப்பது மேலானது என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியிருப்பது சரி....ஆனால் சரியல்ல!

காய்கறி போல அன்றாடம் விலை மாற்றம் இல்லாவிட்டாலும், பெட்ரோல், டீசல் போல மாதம்தோறும் மின்கட்டணத்தையும் நிலக்கரி விலைக்கு ஏற்ப மாற்றி அமைக்கும் சூழ்நிலை உருவானால் ஆச்சரியப்படுவதற்கில்லை. மின்சாரம், பெட்ரோலியப் பொருள்களின் விலை உயரும்போது மற்ற பொருள்களின் விலையும் பன்மடங்கு உயரும்.

அடுத்தது, 100 லட்சம் டன் கோதுமை அபரிமிதமாக உணவுக் கழகத்தில் தேங்கிக் கிடப்பதால் இவற்றைத் தனியாருக்கு - மொத்தக் கொள்முதல் செய்வோருக்கு விற்பனைச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 3 லட்சம் டன் முதல் 9 லட்சம் டன் வரை சில்லறை வியாபாரிகளுக்கு வழங்கப்படும். ஒரு குவிண்டால் ரூ.1,500-க்கு விற்க முடிவு

செய்யப்பட்டுள்ளது. சந்தை விலையை ஒப்பிடும்போது இந்த விலை குறைவுதான். தற்போதைய சந்தை விலை ரூ.1,590 முதல் 1,690 வரை.

ஏற்கெனவே 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது கூடுதலாக 20 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதியை, குறைந்தபட்ச விலையாக டன்னுக்கு 300 அமெரிக்க டாலர் என ஏற்றுமதி செய்யவும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. தரமான கோதுமையை ஏற்றுமதி செய்துவிட்டு, இந்திய உணவுக் கழக கோதுமையை வாங்கி இந்தியச் சந்தையில் "மதிப்பூட்டிய பொருள்களாக' விற்பனை செய்ய ஏதுவாக இந்த நடைமுறையை மத்திய அரசு கையாள்கிறது.

நியாயவிலைக் கடையில், அரசு மானியத்துடன், வறுமைக் கோட்டிற்கு மேலாக இருப்போருக்கு வழங்கப்படும் (10 கிலோ) கோதுமையின் விலை கிலோ ரூ.8.50. ஆனால் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் நியாயவிலைக் கடை கோதுமையை வாங்க மாட்டார்கள். ஒரு கிலோ கோதுமை மாவு ரூ.40 என்று வணிகஇலச்சினையில் முன்னணியில் உள்ள தனியார் நிறுவனங்கள் விற்பதைத்தான் வாங்குவார்கள். இந்த நிறுவனங்களுக்கென கோதுமை தனியாகவா விளைகிறது? இந்திய உணவுக் கழகம் விற்கும் 100 லட்சம் டன் கோதுமை "மதிப்பூட்டிய பொருளாக'ச் சந்தைக்கு வரப்போகிறது.

இந்திய மண்ணில் நிலக்கரி இருக்கிறது. ஆனால் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை!

கோதுமை அபரிமிதமாக இருக்கிறது. ஆனாலும் கூடுதல் விலையில் வாங்க வேண்டிய நிலைமை!

இரவில் வாங்கினோம், விடியவே இல்லை - என்பது உண்மையிலும் உண்மை!

**ரூ.20-க்கு ஒரு கிலோ அரிசி: இதுவரை 18,175 குவிண்டால் விற்பனை**


]

தமிழகத்தில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.20-க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 18 ஆயிரத்து 175 குவிண்டால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

உணவுத் துறையின் செயல்பாடுகள் குறித்து, சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அந்தத் துறையின் அமைச்சர் ஆர்.காமராஜ் கூறியது:

தமிழகத்தில் 1.85 கோடி ரேஷன் அட்டைதாரர்களுக்கு, மாதத்துக்கு சுமார் 3 லட்சத்து 16 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. வெளிச்சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த 1 கிலோ அரிசி ரூ.20-க்கு வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 274 சிறப்பு அங்காடிகள் மூலம் இன்றுவரை 18 ஆயிரத்து 175 குவிண்டால் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பொது விநியோகத்திட்ட தேவைக்கென அரசு கையிருப்பில் 8 லட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியும், இந்திய உணவுக் கழக கிடங்குகளில் 6 லட்சத்து 91 ஆயிரம் மெட்ரிக் டன்னும் இருப்பு உள்ளதால், 5 மாத அரிசி தேவைக்கு போதுமானது.

கண்காணிக்க வேண்டும்: காய்கறி விலை உயர்வினைக் கட்டுப்படுத்தும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கையாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 31 இடங்களில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளை முதல்வர் ஜெயலலிதா தொடங்கி வைத்துள்ளார். பொது மக்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ள இத்திட்டம் சிறப்புடன் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் உணவுத் துறை அதிகாரிகள் அனைவரும் முனைப்புடன் கண்காணிக்க வேண்டும்.

ரேஷன் அட்டை புதுப்பிப்பு: கடந்த ஜனவரி 1-ஆம் தேதி முதல் ரேஷன் அட்டைகளில் உள்தாள்கள் இணைத்து குடும்ப அட்டைகள் புதுப்பிக்கும் பணி காலக்கெடு ஏதும் நிர்ணயம் செய்யாமல், தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 1.94 கோடி ரேஷன் அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி கடத்தும் சமூக விரோத சக்திகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவுப் பொருள் வழங்கல் துறை, வருவாய்த்துறை மற்றும் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையினர் அனைவரும் இரவு ரோந்து

பணிகளை அதிகரித்து, வாகன சோதனைகளில் ஈடுபட்டு, கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டும்.

இதுவரை 410 நபர்கள் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றார் அமைச்சர் காமராஜ். இந்த ஆய்வுக் கூட்டத்தில் உணவுத் துறை செயலாளர் எம்.பி.நிர்மலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

காஞ்சிபுரம் நகராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஜூன் 25-ம் தேதிக்குள் பொதுமக்கள் பராமரிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இப்போது ஒவ்வொரு ஒன்றியங்கள், நகராட்சிகள் அளவில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணிகள் நடைபெற்று வருகிறது.காஞ்சிபுரம் நகராட்சி சார்பில் வெள்ளிக்கிழமை விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.காஞ்சிபுரம் தாலுக்கா அலுவலகத்தில் இருந்து பேரணி புறப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேரணியைத் தொடங்கி வைத்தார்.

இதில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு குறித்து பிரசாரம் செய்தனர்.

பேரணி காமராஜர் சாலை, அன்னை இந்திராகாந்தி தெரு வழியாக அண்ணா அரங்கு வரை பேரணி நடைபெற்றது.

இதில் காஞ்சிபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் வி. சோமசுந்தரம், கோட்டாட்சியர் சக்திமணி, வட்டாட்சியர் பன்னீர்செல்வம், நகர்மன்றத் தலைவர் மைதிலி திருநாவுக்கரசு, துணைத் தலைவர் ஆர்.டி. சேகர், ஆணையர் விமலா, தலைமைப் பொறியாளர் சுப்புராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோழிப் பண்ணைகளுக்கு ஆட்சியர் எச்சரிக்கை**

விழுப்புரம் மாவட்டத்தில், கோழிப்பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு, பறவைக் காய்ச்சல் தடுப்பூசி என்ற பெயரில் இந்திய அரசால் தடை செய்யப்பட்ட தடுப்பூசிகளை பயன்படுத்தக் கூடாது என்று ஆட்சியர் வா.சம்பத் எச்சரித்துள்ளார்.

பறவைக் காய்ச்சல் நோய் கண்காணிப்புக் குழுக் கூட்டம், வியாழக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்து பேசியது:

இக் கூட்டத்தில், பறவைக்காய்ச்சல் நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், அதிகாரிகள் கொண்ட துரித செயல்பாடு குழு அமைக்க வேண்டும். கோழி, வாத்து, வான்கோழி மற்றும் மனிதர்களையும் தாக்கக் கூடிய கொடிய நச்சுயிரியால் ஏற்படும் பறவைக் காய்ச்சல் நோயை கண்டறிதல், நோய் ஏற்பட்டால் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், மாவட்டத்தில் உள்ள கோழிப் பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு நோய் தாக்காத வண்ணம், பாதுகாக்க பறவைக் காய்ச்சல் தடுப்பூசி என்ற பெயரில் இந்திய அரசால் தடை செய்யப்பட்ட தடுப்பூசியை பயன்படுத்த வேண்டாம் என்ற தகவலை பண்ணை கோழி வளர்ப்போர் மற்ற கோழி வளர்ப்போர் அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பயிற்சி நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றார்.

இக் கூட்டத்தில் பறவைக்காய்ச்சல் குறித்த துண்டு பிரசுரங்கள் அனைத்து அலுவலர்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டன.

விழுப்புரம், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் கி.மகேந்திரன், கால்நடை உதவி மருத்துவர் எஸ்.சந்திரன் ஆகியோர் பங்கேற்று பறவைக் காய்ச்சல் நோய் குறித்தும், கோழிப் பண்ணைகளில் மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்வது குறித்தும் விளக்கம் தெரிவித்தனர்.

**மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாக பராமரிக்க ஆலோசனை**

விழுப்புரம் நகராட்சி பகுதிக்குள்பட்ட கட்டடங்களில், உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உரிய முறைப்படி பராமரிப்பு செய்வது, மேலும் புதிதாக உருவாக்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம், வியாழக்கிழமை நடைபெற்றது.

விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு நகர்மன்றத் தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். நகர்மன்ற துணைத் தலைவர் முத்துலட்சுமி, நகர்மன்ற ஆணையர் ராஜேந்திரன், பொறியாளர் பார்த்திபன், மேலாளர் வசந்தி, நகர்மன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

இக் கூட்டத்தில், நகராட்சி பகுதியில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை முறையாக பராமரிப்பது, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாத இடங்களில் புதிதாக மழைநீர் கட்டமைப்பு உருவாக்குவது ஆகியவை தொடர்பாக ஒளித்திரை மூலம் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. மழை நீர் சேகரிப்பால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், அதன் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது.

இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பாக செயல்படுத்தும் நோக்கத்தில் நகர் மன்ற உறுப்பினர்களுக்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களுக்கும் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட உள்ளது என்று இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

**கரும்பு பயிருக்கு வறட்சி நிவாரணம் வேண்டும்**

விழுப்புரம் மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் கரும்பு பயிர்கள் காய்ந்துவிட்டன. எனவே கரும்பு பயிருக்கு வறட்சி நிவாரணம் பெற்று வழங்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டத்தில் பல்வேறு விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை தாங்கினார்.

இக் கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது போதிய மழை இல்லாததால் கரும்பு பயிர்கள் தண்ணீர் இன்றி காய்ந்து வருகின்றன. கரும்பு பயிருக்கு வறட்சி நிவாரணம்

பெற்று வழங்கவும், மழைநீரை சேமிக்கும் வகையில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வரத்து வாய்க்கால் மற்றும் அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்தவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனை கூடங்களிலும் விவசாயிகளுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்யவும், எதிர்வரும் சம்பா பருவத்துக்கு தேவையான விதைகள் மற்றும் உரங்கள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைத்திடவும், விரைவாக பட்டா மாற்றம் செய்யவும், விடுபட்ட குடும்ப அட்டை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்தனர்.

இக் கூட்டத்தில் விக்கிரவாண்டி எம்எல்ஏ ராமமூர்த்தி பங்கேற்று பேசியது: விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் இடைத்தரர்கள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. மார்க்கெட் கமிட்டியில் போதிய அலுவலர்களும் இல்லை. மணல் கடத்தல் தொடர்ச்சியாக நடக்கிறது. ஆனால் மாட்டு வண்டியில் மணல் எடுத்துச் செல்பவர்களை பிடிக்கின்றனர். மாட்டு வண்டியில் மணல் எடுத்துச் செல்பவர்களுக்கு முறைப்படி மணல் எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியை வறட்சி நிவாரணக் குழு பார்வையிட வேண்டும். மின்கட்டணம் மற்றும் மின்சாரம் தொடர்பான பிரச்னைகள் தொடர்பாக ஒழுங்குமுறை ஆணையம் விழுப்புரம் உள்ளிட்ட மத்திய மாவட்ட விவசாயிகளின் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்த வேண்டும்.

கண்டமங்கலம் பகுதியில் நவம்மாள் மருதூர் உள்ளிட்ட பகுதிகளில் வேளாண் நிலங்களில் பள்ளம் தோண்டப்படுகிறது. அது எதற்காக என்பதை தெரிவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இக் கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சு.ராஜசேகரன், தமிழ்நாடு மின்சார வாரியக் கண்காணிப்பு பொறியாளர் மா.அசோகன், கள்ளக்குறிச்சி கண்காணிப்புப் பொறியாளர் ரா.சிவாஜி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னைக்கு நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

வறட்சியால் சாகுபடி பாதிக்கப்பட்ட தென்னைக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். அதன் விவரம்:

பேரணை முதல் கள்ளந்திரி வரை  வரத்து வாய்க்கால்களில் மராமத்துப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயக் கடன்களுக்கு வட்டி விகிதம் குறைக்க வேண்டும். அணையில் நீர்மட்டம் உயரும்போது தண்ணீர் திறந்துவிடப்படலாம். ஆகவே, விவசாயத்துக்குத் தேவையான விதை, உரம் உள்ளிட்ட இடுபொருள்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தென்னை மரங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆட்சியர் அறிவுறுத்தினார்.

## 4 ஆண்டுகளாக விவசாயம் செய்யாத நிலங்களுக்கு வறட்சி நிதி: விவசாயிகள் புகார்

4 ஆண்டுகளாக விவசாயம் செய்யாமல் தரிசாக கிடக்கும் நிலங்களுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளதாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் புகார் அளித்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் கே. மனோகரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

பரப்பலாறு அணைப் பகுதியில் உள்ள வண்டல் மண்ணை விவசாய நிலங்களுக்கு எடுத்துச் செல்ல அதிகாரிகள் அனுமதி மறுப்பதாக விவசாயிகள் புகார் கூறினர். அதற்கு

பதில் அளித்த ஆட்சியர், வனத்துறை அதிகாரிகள் மூலம் அதற்கான அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அண்மையில் தமிழக அரசு அறிவித்த வறட்சி நிவாரணத்தில் தோட்டப்பயிர்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை என விவசாயிகள் முறையிட்டனர். வறட்சி பாதிப்பு கணக்கெடுப்பின் போது தோட்டப்பயிர்கள் சேர்க்கப்படவில்லை, இதுகுறித்து விவசாயிகள் அளிக்கும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் மாவட்டத்தில் சுமார் 727 ஏக்கரில் மல்பரி செடிகள் சாகுபடி செய்து பாதிப்படைந்த 450 விவசாயிகளுக்கு, இதுவரை வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என மல்பரி விவசாயிகள் புகார் தெரிவித்தனர். அதற்கு பதில் அளித்த மாவட்ட ஆட்சியர், மல்பரி சாகுபடி செய்து 50 சதவீத பாதிப்பிற்குள்ளான விவசாயிகளுக்கு ஏக்கருக்கு தலா ரூ.3 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும்

என்றார்.

குஜிலியம்பாறை ஒன்றியத்தில் உள்ள பாளையம் பகுதியில் உள்ள 10க்கும் மேற்பட்ட கண்மாய்களை மழைக் காலம் தொடங்குவதற்கு முன்பே,பாதைகளில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அந்த அடைப்புகளை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் தெரிவித்தார். அதேபோல் அன்னவாரிச் சான்றிதழ் கேட்கும் விவசாயிகளுக்கு, உடனடியாக வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆட்சியர் தெரிவித்தார்.

பழனி வட்டத்தைச் சேர்ந்த கோம்பைப்பட்டி விவசாயிகள் கூறுகையில், கரும்பு பயிர் காப்பீட்டுக்கான அலுவலகம் எங்கே உள்ளது என்ற விவரத்தினை தெரிவிக்க வேண்டும் என ஆட்சியருக்கு கோரிக்கை விடுத்தனர். அதேபோல் பல ஏக்கர் நிலங்களுக்கு சொந்தமானவர்களுக்கும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலை

வழங்கப்பட்டு வருவதாகவும், ஆனால் அவர்கள் வேலைக்கு செல்லாமலேயே பணம் பெற்று வருவதாகவும் புகார் தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்த ஆட்சியர், இத்திட்டத்தில் வேலை செய்யாத யாருக்கும் ஊதியம் வழங்க முடியாது. மேலும் பணியாளர்கள் செய்த வேலைக்கு ஏற்ப, அவர்களுக்கு வங்கி மூலம் பணப்பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது என்றார்.

தொப்பம்பட்டி பகுதியில் தென்னை சாகுபடி செய்தவர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட வில்லை என்ற புகாருக்கு நடவடிக்கை எடுப்பதாக ஆட்சியர் உறுதி அளித்தார்.

குஜிலியம்பாறை பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறும்போது கடந்த 4 ஆண்டுகளாக சாகுபடி செய்யாத நிலத்திற்கு தற்போது வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது, ஆனால் நியாயமாக கிடைக்க வேண்டியவர்களுக்கு இதுவரை நிவாரணம் கிடைக்கவில்லை என புகார் தெரிவித்தனர். அதேபோல் மாட்டுத் தீவனத்திற்கும் மானியம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

விரைவில் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, நங்காஞ்சியார் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செந்தில்வேலன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஜூன் 28இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூன் 28-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ.முத்தையா தெரிவித்தார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 47.15 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 47.15 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 3,783 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 2.42 டி.எம்.சி

**மல்லசமுத்திரத்தில் கொப்பரை கொள்முதல் மையம் தொடக்கம்**

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் கூட்டுறவு சங்கக் கிளையில் ஆதார விலைத் திட்டத்தின் கீழ், கொப்பரை கொள்முதல் மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தென்னை சாகுபடி விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசின் ஆதார விலைத் திட்டத்தின் கீழ், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை இணைந்து நாமக்கல் மாவட்டத்தில் கொப்பரை கொள்முதல் செய்து வருகிறது.

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மல்லசமுத்திரம் கிளையில் வாரம் தோறும் வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்று வரும் இந்த கொப்பரை கொள்முதல் மையத்தில் நேஃப்ட் நிறுவனம் குறிப்பிட்டுள்ள தரத்துக்கு உள்பட்ட கொப்பரைகள் மட்டும் அரைவை கொப்பரைகள் கிலோ ரூ.52.50 வீதமும், பந்து கொப்பரைகள் கிலோ ரூ.55 வீதமும் கொள்முதல் செய்யப்படுகிறது.

எனவே, கொப்பரைகளை நன்கு உலர்த்தி மணல், தூசி, தேங்காய் ஓடு போன்றவைகளையும், பூஞ்சானம் பாதித்த கருமையான அழுகிய தேங்காய்களையும் நீக்கிவிட்டு சுருங்கிய மற்றும் சிறு துண்டுகளை அகற்றி முதல் தரமான கொப்பரைகளை மட்டும் விற்பனைக்கு கொண்டு வர வேண்டும். இந்தத் திட்டத்தில் கொப்பரைகளை

விற்பனை செய்ய விரும்பும் தென்னை விவசாயிகள் அந்தந்த வட்டத்திலுள்ள வேளாண் உதவி இயக்குநரிடம் சாகுபடி விவசாயி என்பதற்கான அடையாள அட்டை பெற்றுக் கொள்ளவேண்டும். அதில் குறிப்பிட்டுள்ள அலுவலர்களிடம் சான்று பெற்று திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மல்லசமுத்திரம் கிளையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்யாத விவசாயிகளிடம் இருந்து கொப்பரைகள் கொள்முதல் செய்யப்படாது.

எனவே, விதிமுறைகளுக்கு உள்பட்டு இந்தத் திட்டத்தில் கொப்பரைகளை விற்பனை செய்து விவசாயிகள் பயன்பெற வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதிகக் காற்று, ஈரப்பதத்துடன் தட்பவெப்ப நிலை**

நாமக்கல் மாவட்ட தட்பவெப்ப நிலை அதிகக் காற்று, ஈரப்பதத்துடன் காணப்படும் என நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (ஜூன் 22 முதல் ஜூன் 25 வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 3 மிமீ முதல் 4 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

காற்றின் திசைவேகம் மணிக்கு 6 கிமீ முதல் 7 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 95 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 42 சதம் முதல் அதிகபட்சம் 78 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: அதிக காற்றுடனும் ஈரப்பதத்துடனும் காணப்படும் நாமக்கல் மாவட்ட தட்பவெப்ப நிலை, கோழிகளின் இயல்பான முட்டை உற்பத்திக்கு ஏதுவாக அமையும். எனினும், தொடர்ந்து தீவனத்தில் அதிக புரதம், எரிசக்தியும், வைட்டமின் உயிர்ச் சத்துகளும் கொடுத்து வருவதால் இதுவரை கோடையில் இழந்த நோய் எதிர்ப்புத் திறனையும், உற்பத்தியையும் மீண்டும் பெற முடியும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் மேல்மூச்சுக் குழாய் நோய் மற்றும் ராணிக்கெட் நோய்களின் தாக்கத்தால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் கோழிகளில் ராணிக்கெட் நோய்க்கு எதிரான எதிர்ப்புத் திறனை இந்த ஆய்வகத்தில் ஆய்வு செய்து அதற்கேற்ப தடுப்பூசியை அளிப்பதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைபிடித்திட வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:தற்போது 4 மாத வயதுடைய மரவள்ளிச் செடிகளில் இலை உதிர்தல் நோய் காணப்படுவதால் இலைகள் காய ஆரம்பித்து செடியிலிருந்து உதிர்ந்து விழக்கூடும்.

இதைத் தடுக்க, மான்கோசெஃப் என்ற பூஞ்சானக் கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி அளவில் ஒரு மில்லி ஒட்டும் திரவத்துடன் சேர்த்து கலந்து தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் விவரங்கள் சேகரிக்கும் சிறப்பு முகாம்: ஜூன் 24}ல் தொடக்கம்**

அரியலூர் மாவட்டத்தில் சொட்டுநீர் பாசன திட்டம் தேவைப்படும் விவசாயிகளின் விவரங்கள் சேகரிக்கும் சிறப்பு முகாம் ஜூன் 24 முதல் ஜூன் 28 வரை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் எம். ரவிக்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விவசாயத்தில் சிக்கனமாக நீரை செலவு செய்து இருமடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் பெற தோட்டக் கலைத் துறை மூலம் காய்கறி, மலர்கள், பழப்பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படுகிறது.

சொட்டுநீர் பாசனம் அமைப்பதன் மூலம் குறைந்த நீரைக் கொண்டு அதிகப்பரப்பில் பயிர் செய்து, 75 சத நீரை சேமிக்கலாம். குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதோடு பயிர் திடமாகவும், ஆரோக்கியமாகவும் வளர்ந்து வேகமாக முதிர்ச்சியடையும். தண்ணீரில் கரையும் உரங்களை நேரடியாக பயிரின் வேர்ப்பகுதியில் விநியோகிக்கலாம்.

சொட்டுநீர் பாசன திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் சொட்டுநீர் அமைக்க 100 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியத்தில் 12.5 ஏக்கர் வரையும் வழங்கப்படுகிறது.

எனவே, சொட்டுநீர் பாசன திட்டத்தை விவசாயிகளிடையே கொண்டு செல்லும் வகையில் அரியலூர், திருமானூர், தா.பழூர், செந்துறை, ஜயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் ஆகிய தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் ஜூன் 24-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை சொட்டுநீர் பாசன திட்டம் தேவைப்படும் விவசாயிகளின் விவரங்களை சேகரிக்கும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

எனவே, சொட்டுநீர் பாசன அமைப்பு தேவைப்படும் விவசாயிகள் நில ஆவணங்களுடன், சம்பந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நடைபெறும் சிறப்பு முகாமை பயன்படுத்தி தங்களது பெயரை பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றார்.

**வறட்சி நிவாரணம் அனைவரும் கிடைக்க நடவடிக்கை**

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

ஜி.எஸ். தனபதி: வறட்சி நிவாரண உதவி அனைவருக்கும் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு குரங்குகளால் ஏற்படும் தொல்லையைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுத்து வரும் மாவட்ட நிர்வாகத்துக்கு நன்றி.

மிசா. மாரிமுத்து: அரசு அறிவிக்கும் திட்டங்களில் எந்தக் குறையுமில்லை. ஆனால், அனைத்துக்கும் அடிப்படையாக உள்ள நீர் ஆதாரத்தை பெருக்க வேண்டும். மேலும் மாவட்டத்திலுள்ள ஏரி, குளங்களை தூர்வார முன்னுரிமை அளிக்க வேண்டும்.

எஸ். சங்கர்: விவசாயத்துக்கு ஆதாரமான நீரைச் சேமிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் நடப்பதைப் போல பண்ணைக் குட்டைகளை புதுகை மாவட்டத்திலும் அமைக்க வேண்டும்.

பொன்னுச்சாமி:  வறட்சி நிவாரணக் கணக்கெடுப்பு முறையாக நடைபெறவில்லை. குறிப்பாக, விராலிமலை ஒன்றியத்தில் பாதிக்கப்பட்ட பலருக்கு நிவாரண உதவி கிடைக்கவில்லை.

சாலை விபத்தில் உயிரிழந்த பள்ளி மாணவர்களின் குடும்பத்துக்கு ரூ. 5 லட்சம் நிவாரண நிதி வழங்க வேண்டும்.

முத்துராசு: வடகாடு, மாங்காடு, கீரமங்கலம் ஆகிய பகுதிகளில் அண்மையில் வீசிய சூறைக்காற்றால் பலா, வாழை, மாமரங்கள் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

தினகரசாமி: வல்லத்திராக்கோட்டை பழப்பண்ணைக்கு தார்ச்சாலை அமைக்க வேண்டும்.

எள் பயிருக்குத் தேவைப்படும் மாங்கனீஸ் சல்பேட் உரம் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்ய வேண்டும்.

கோவிந்தராசு: வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனுதவி வழங்க வேண்டும்.

சி. அப்பாவு பாலாண்டார்: மழை காலம் தீவிரமடையும் முன்னே நீர்நிலைகள் அனைத்தையும் கணக்கெடுத்து கொள்ளளவை அதிகரிக்கும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

ராமதீர்த்தார்: நீர்செறிவூட்டும் திட்டம், பண்ணைக்குட்டைகளைவிட ஏரிகள் குளங்களில் கிணறுகளை அமைத்தால் வறட்சி நேரத்தில் அனைவருக்கும் கைகொடுக்கும்.

சொக்கலிங்கம்: ஆவணத்தான்கோட்டை ஐஓபி வங்கியில் விவசாயிகள் அடகு வைத்த நகைகளை திருப்பித் தர மறுக்கின்றனர்.

முன்னோடி வங்கி மேலாளர் ராமசாமி: நகை அடகு வைத்திருப்பவர்கள் குறித்த பட்டியலை அளித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 16.23 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496**

மேட்டூர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 16.23 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**கரும்பு விவசாயிகளுக்கான நிலுவை தொகை வழங்க நடவடிக்கை**

கரும்பு விவசாயிகளுக்கு தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

கரும்பு விவசாயிகளுக்கு திருமண்டங்குடி திருஆரூரான் சர்க்கரை ஆலையும், கோட்டூர் அம்பிகா சர்க்கரை ஆலையும் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு கிடைப்பதற்கான நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

பணம் பட்டுவாடா செய்வதில் ஏற்பட்ட காலதாமத்துக்காக இந்த நிலுவைத் தொகையுடன் 15 சதவீத ஆண்டு வட்டியும் சேர்த்து வழங்குவதாக ஆலை நிர்வாகங்கள் உறுதியளித்துள்ளன.

இதில், திருஆரூரான் சர்க்கரை ஆலை ரூ. 22 கோடியை ஜூன் 30-ம் தேதிக்குள்ளும், ரூ. 20 கோடியை ஜூலை 31-ம் தேதிக்குள்ளும் வட்டியுடன் சேர்த்து வழங்குவதாக உறுதி அளித்தது.

அம்பிகா சர்க்கரை ஆலை ஜூன் மாதத்துக்குள் ரூ. 23 கோடியும், ஜூலை மாதத்துக்குள் ரூ. 15 கோடியும், ஆகஸ்ட் மாதத்துக்குள் ரூ. 12.64 கோடியும் வழங்கப்படும் என உறுதி அளித்துள்ளது என்றார் பாஸ்கரன்.

இந்த நிலுவைத் தொகையை விரைவில் வழங்க வலியுறுத்தி, திருஆரூரான் சர்க்கரை ஆலை முன்பு விவசாயிகள் பட்டினிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இரு ஆலைகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து பேசிய ஆட்சியர், அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த கோட்டாட்சியரை அனுப்பியுள்ளேன் என்றார் அவர்.

(ஆனால், பட்டினிப் போராட்டம் தொடர்ந்து ஐந்தாவது நாளாக வெள்ளிக்கிழமையும் நடைபெற்றது).

பொன்னவராயன்கோட்டை வீரசேனன்:

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்படும் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? என்பது குறித்து தெரிவிக்க வேண்டும்.

ஆட்சியர்: இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் தெரிவிக்கும் கோரிக்கைகள் குறித்து அவர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அவசியம் பதில் அளிக்க வேண்டும். கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது என்றால் அதற்கான காரணத்தையும் கூற வேண்டும். விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட பதில் நகல் ஒன்றை நேர்முக உதவியாளருக்கும் (வேளாண்மை) அனுப்ப வேண்டும். இதையெல்லாம் நேர்முக உதவியாளர் கண்காணிக்க வேண்டும்.

ராயமுண்டான்பட்டி வெ. ஜீவகுமார்: கர்நாடக அணைகளான கபினி, ஹேரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜ சாகர் ஆகிய அணைகளில் வழியும் நிலை உள்ளது. ஆனால், மேட்டூர் அணையில் 17 அடிக்கு கீழ் உள்ளது.

கர்நாடக அரசு திட்டமிட்டு வேண்டுமென்றே டெல்டா மாவட்டங்களில் செயற்கையாக பஞ்சத்தை உருவாக்கியுள்ளது. தமிழக அரசு அனைத்து வழிகளிலும் முயற்சி செய்து

தண்ணீர் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். தண்ணீர் இல்லாத இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி தூர் வாருவதற்கான நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஆட்சியர்: தூர் வாருவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் மாவட்டத்தில் 210 பணிகள் ரூ. 10.16 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ளன. விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தூர் வாருவது தொடர்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து இந்தப் பணி மேற்கொள்ளப்படும். ஆம்பலாப்பட்டு அ. தங்கவேல்: வேளாண் விரிவாக்க மையங்களில் விதை நெல் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், ஒரத்தநாடு விரிவாக்க மையத்தில் விதை நெல் கிடைக்கவில்லை. கூட்டுறவு கடன் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கிடைக்கும்.

கூட்டுறவு துறை இணைப் பதிவாளர் ச. சுப்பிரமணியன்: கூட்டுறவு கடன் தொடர்பான ஆணை இரு நாள்களில் வந்துவிடும். வந்தவுடன் ஆட்சியர் மூலம் அறிவிக்கப்படும்.

**வறட்சி நிவாரணமாக ரூ. 55.46 கோடி அளிப்பு**

பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரணமாக 1 லட்சத்து 32 ஆயிரத்து 367 விவசாயிகளுக்கு, ரூ. 55.46 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட வருவாய் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் ஜமாபந்தி, “அம்மா’ திட்ட முகாம்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், முதலமைச்சரின் சிறப்பு பிரிவிலிருந்து பெறப்படும் மற்றும் மனுநீதி நாள் முகாமில் பெறப்படும் மனுக்களில் ஒவ்வொரு அலுவலகம் சார்பில் மேற்கொண்ட பணிகளின் முன்னேற்றம், நிலுவைப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் மேலும் கூறியது:

அனைத்து கிராமங்களிலும் உள்ள அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவைகள் வழங்குவதற்காக "அம்மா' திட்ட முகாம்கள், மாதாந்திர உதவித்தொகை வழங்கும்

திட்டங்கள் ஆகியவற்றோடு, மாவட்ட மின் ஆளுமை திட்டம், குடும்ப அட்டை வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலத்திட்டங்களில் ஏழை, எளிய மக்களை பயன்பெற செய்வதில் வருவாய்த் துறையினரின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

குறிப்பாக, முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்களை உடனுக்குடன் தீர்வு கண்டதற்காக இரண்டு முறை கேடயம் பெறப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் கல்விக்கடன், விவசாயக்கடன், குடும்ப அட்டை வழங்குவதற்கான முகாம்களில் வருவாய்த் துறையினரின் பங்கு அதிகளவு உள்ளது.

வறட்சி நிவாரணம் வழங்கும் பணிக்காக சிறப்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் புகைப்படத்துடன் கூடிய வறட்சி நிவாரண அடையாள சீட்டு வழங்கப்பட்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. வறட்சி நிவாரணமாக பாதிக்கப்பட்ட 1,59,042 விவசாயிகளில், இதுவரை 1 லட்சத்து 32 ஆயிரத்து 367 விவசாயிகளுக்கு ரூ. 55 கோடியே, 46 லட்சத்து, 16 ஆயிரத்து 947 வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல, அனைத்து பணிகளிலும் வருவாய்த் துறையினர் முழுக்கவனத்தோடு, பொதுமக்கள் பயனடையும் வகையில் பணிபுரிய வேண்டும் என்றார் அவர்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தி. இளங்கோவன், கோட்டாட்சியர் ப. புஷ்ப மாரியம்மாள், தனித்துணை ஆட்சியர் இரா. ரேவதி, நில அளவை உதவி இயக்குநர் நல்லான் உள்பட வருவாய்த்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டில் "மதுரை மல்லி'க்கு கட்டுப்பாடு:மீறிய பூக்கூடைகள் பறிமுதல்

மதுரை:மதுரை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டில், பயணிகளுக்கு இடையூறாக "மதுரை மல்லி' விற்பதற்கு மாநகராட்சி கட்டுப்பாடு விதித்துள்ளது. அதை மீறியோரின் பூக்கள், பறிமுதல் செய்யப்பட்டன.மாநகராட்சி வசம் உள்ள மாட்டுத்தாவணி ஐ.எஸ்.ஓ., பஸ் ஸ்டாண்டில் நிலவும் சுகாதாரக்கேடு, ஆக்கிரமிப்பில், "மதுரை மல்லி' விற்கும் பூ வியாபாரிகள் தான் காரணம் என, நிர்வாகம் கருதியது. பூக்களின் கழிவுகள் கொட்டுவது, கண்ட இடத்தில் நீரை தெளிப்பது, பஸ்கள் நிற்கும் இடங்களில், இடையூறாக நிற்பது போன்ற செயல்களில், பூ விற்பனையாளர்கள் ஈடுபட்டனர்.அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, நேற்று முதல், "கடைகளில் மட்டுமே பூக்கள் விற்க முடியும், பஸ் ஸ்டாண்டின் வேறு எந்த பகுதியிலும், பூக்கள் விற்கக்கூடாது,' என, மாநகராட்சி தடை விதித்தது. பஸ் ஸ்டாண்ட் நுழைவுப்பகுதியில், பயணிகள் நிழற்குடைக்கு பின்புறம் கட்டப்பட்டுள்ள 80 கடைகளில் மட்டுமே, பூ வியாபாரம் நடக்க வேண்டும், என, அறிவித்தது. ஒலிபெருக்கி மூலம், பஸ் ஸ்டாண்டில் தொடர் அறிவிப்பும் வெளியிட்டு வருகிறது. பெரும்பாலான பூ வியாபாரிகள், கடைகளில் விற்பனையை தொடங்கிய நிலையில், வழக்கம் போல் சிலர், பஸ் நிற்கும் பகுதிகளில் "மதுரை மல்லி' விற்பனை செய்தனர். அதிகாரிகள், அவர்களை பலமுறை எச்சரித்தும், "நிற்பதும், ஓடுவதுமாய்' விற்பனை நடந்து கொண்டிருந்தது. பொறுந்திருந்து பார்த்த அதிகாரிகள், அதன் பின் அதிரடியில் இறங்கினர். கட்டுப்பாட்டை மீறி விற்பனை செய்த வியாபாரிகளின் பூக்கூடைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

## நன்செயில் கரும்பு சாகுபடி கருத்தரங்கு

கூடலூர்:நன்செயில் கரும்பு சாகுபடி செய்வது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு கூடலூரில் நடந்தது. தேனி ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் நடந்த கருத்தரங்கிற்கு, வயல்பகுதி உதவி மேலாளர் ஜெயக்குமார் தலைமை வகித்தார். கரும்பு அலுவலர் ஆத்தியப்பன் முன்னிலை வகித்தார். வயல் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பில்

மகசூல் அதிகப்படுத்துவது. தென்மேற்கு பருவமழையை பயன்படுத்தி கரும்பு சாகுபடி செய்வது. சாகுபடியில் இயந்திரங்கள் பங்கு. சாகுபடி செய்பவர்களுக்கு பயிர்கடன பெறுவது உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கரும்பு உதவியாளர்கள் பிரபு, கோபி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தூர்வாரப்படாத கண்மாய்களால் விவசாயத்திற்கு நோ யூஸ் :அதிகாரிகள் அசட்டையால் ஊரை காலி செய்யும் விவசாயிகள்**

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் உள்ள,பெரும்பாலான கண்மாய்கள் தூர்வராப்படாமல் மண்மண்டி, நில பரப்பு போன்று காட்சிதருகிறது. அதிகாரிகள் அசட்டையால் விவசாயம் செய்ய வழியின்றி,விவசாயிகள் ஊரை காலி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மாவட்டம் வானம் பார்த்த பூமி என்பதால், இங்குள்ள விவசாயிகள் வாழ்க்கை மழையை நம்பியே உள்ளது. பெரும்பாலான பகுதிகளில், மோட்டார் பாசனம் இல்லாததால், எள், சோளம், கம்பு, கேழ்வரகு, மல்லி, பருத்தி, மிளகாய் போன்ற, தானிய பயிர்களே அதிகம் உள்ளது. மழை பெய்யாவிட்டால், விவசாயிகள் பாடு திண்டாட்டம் தான். மழை பெய்யும் போது கண்மாயில் சேரும் நீரை கொண்டும், விவசாயிகள் பாசனம் செய்வர்.மழை இல்லாவிட்டாலும், இங்குள்ள மக்களுக்கு குடிநீருக்கும்,விவசாயத்திற்கும் கண்மாய் நீர்பெரும் உதவியாக இருக்கும். ஆனால் தற்போது கண்மாய்கள், வரத்துகால்வாய்கள், ஆண்டு கணக்கில் தூர்வாரப்படாமல்,கண்மாய் இருந்ததற்கான அடையாளம் இன்றி, நில பரப்பு போன்று காட்சி அளிக்கிறது.

இங்கு நீர் வரும் வரத்து கால்வாய்களோ,ஆக்கிரமிப்பு,புதர் மண்டி காணப்படுகிறது. இதனால் விவசாயம் பரப்பு குறைந்து வருகிறது. விவசாயிகளும் பிழைப்பு இன்றி,வெளியூரில் குடியேறும் நிலையும் தொடர்கிறது. விருதுநகர் மாவட்டத்தில் பொது பணித்துறை சார்பில், 290 கண்மாய், ஒன்றியம் சார்பில் 708 கண்மாய், எதிலும் சேராமல் நான்கு கண்மாய் என, 1002 கண்மாய்கள் உள்ளன. இந்த கண்மாய்களில் 70 சதவீதத்திற்கு மேல், ஆங்கிலேயர் காலத்தில் தூர்வாரப்பட்டது என்பது தான்

வேதனையான விஷயம். இதில் பல கண்மாய்கள்,இது கண்மாயா என ஆச்சர்யம் படும் நிலையில்உள்ளது. வரத்து கால்வாய்களை கண்டுபிடித்து தர வேண்டிய சூழலில், ஆக்கிரமிப்புகள் உள்ளன. ஆனால் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இல்லாததால், நாளடைவில் கணமாய்கள் அனைத்தும், விளைநிலங்கள் விலை நிலங்களாக மாறுவது போல், விலை போகலாம் என்பது சந்தேகம் இல்லை.அந்த வகையில்தான் இன்றைய அதிகாரிகளின் நடவடிக்கைளும் உள்ளன.அணைகளிலும் இதே நிலை தான்...விவசாயிகள் சங்க தலைவர் விஜயமுருகன் கூறுகையில், ""மாவட்டத்தில் உள்ள பல கண்மாய்களில், 3 அடி ஆழம் வரை மண் அள்ள, அரசு அனுமதி கொடுத்தால், ஒப்பந்தகாரர்கள் 25 அடிக்கு மேல் மண் அள்ளி விடுகின்றனர். இதனால் கண்மாய் பள்ளமாகி விடுகிறது, மடை மேடானதால், விவசாயத்திற்கான தண்ணீரை வெளியே கொண்டு செல்ல முடியவில்லை.குல்லூர் சந்தை, கோல்வார்பட்டி, பிளவக்கல், கோவிலாறு ஆணைகள் தூர்வாராததால் மேடாகி விட்டது. ஒன்றிய கண்மாய்கள் முழுவதும் கருவேல மரங்கள் உருவாகி, மேடாகி விட்டது. தண்ணீர் தேக்கி வைக்க முடியாததால், விவசாயம் செய்ய முடியவில்லை. மாவட்ட நிர்வாகம்தான் அனைத்து கண்மாய், வரத்து கால்வாய்களை தூர்வாரநடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.விவசாயி அருண்குமார் கூறுகையில், ""பாலவநத்தம், நந்திரெட்டியபட்டி பகுதியில், மழையை நம்பியே விவசாயம் செய்கின்றனர். இங்குள்ள கண்மாய்களை ஆழப்படுத்தி தண்ணீர் தேக்குவற்கு,அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வில்லை," என்றார்.நல்லதரை பாண்டி,"" நரிக்குடி பகுதியில் உள்ள கண்மாய்களில் பெரும்பாலானவை, தூர் வார வில்லை. இதனால் சிறிய மழை பெய்தாலே கண்மாய் நிரம்பி விடுகிறது. சில கண்மாயில் முட்புதர்களாக இருப்பதால், மழைநீரை உறிஞ்சி விடுகிறது. வரத்துக் கால்வாய் இருந்தும் தூர்வாரப்படாததால்,மழைநீர் ஓடி வருவதற்கு வாய்ப்பில்லை. நேரடியாக கண்மாய்களில் விழுகின்ற மழைநீர் சேமிக்கவும் வழியில்லை. கண்மாய்களில் முறையான மடைகள் இல்லை. இதனால் மழைநீர் தேங்கியிருந்தாலும் அதனை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியவில்லை. பருவ மழை காலம் என்பதால், கண்மாயை தூர்வாருவதோடு, தண்ணீர் வெளியேறும் வகையில் மடைகள் அமைத்து, விவசாயத்திற்கு வழிவகை செய்ய வெண்டும்,"என்றார். ராஜபாளையம் தர்ம ராஜா, ""பல

இடங்களில் கண்மாய் கரைகளை மட்டும் பலப்படுத்திவிட்டு, கண்மாயை தூர்வாராமல் சென்று உள்ளனர். ராஜபாளையத்தில் புதுக்குளம், புளியங்குளம், ஆதியூர் கண்மாய்கள் முள்புதராக உள்ளது. மணல் திருட்டு அதிகமானதால், சில கண்மாய்களை காணவில்லை. பல கண்மாய்களில் நீர் வரத்து கால்வாய் கரைகளை உடைத்து, மணல் திருட்டு நடக்கிறது.

கரைகள் உடைப்பதால், அடுத்த கண்மாய்களுக்கு செல்லவேண்டி தண்ணீர், விளைநிலங்களில் தேங்குகிறது. இதன் மூலம் கண்மாய் பாசனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டனர். அனைத்தலை ஆறு 115 அடி அகலம் இருந்தது.

ஆக்கிரமிப்பாளர்களால், தற்போது 20 அடிக்கும் குறைவாக உள்ளது,"என்றார்.ஆழப்படுத்தும் பணி நடக்கிறதாம்கலெக்டர் ஹரிஹரன் கூறுகையில்,""பொது பணித்துறை கண்மாய்களை ஆழப்படுத்தும் பணி நடந்து வருகிறது. மழைநீர் வரும் கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்ற, நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றிய கண்மாய்களை தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ஆழப்படுத்த, நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

**நீலகிரி கொய்மலர் விவசாயிகளுக்கு விலையில் "அடி'**

கோத்தகிரி:கொய் மலருக்கு போதிய விலை கிடைக்காததால், நீலகிரி விவசாயிகள் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு அடுத்தப்படியாக, காய்கறி மற்றும் கொய்மலர் சாகுபடி செய்யப்படுகிறது. அரசின் ஊக்குவிப்பின் பேரில், கோத்தகிரி கொதுமுடி, கலிங்கனட்டி, நெடுகுளா, கேர்கம்பை, பெட்டட்டி, மற்றும் ஊட்டி சுற்றுவட்டார பகுதிகளில், கொய்மலர் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆரம்பத்தில், கொய்மலருக்கு போதிய விலை கிடைத்த நிலையில், விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைத்தது. நடப்பாண்டு, இந்நிலை முழுவதுமாக மாறியுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் ஒரு கார்னேசன் மலருக்கு 5 ரூபாய் விலை கிடைத்த நிலையில், தற்போது 1 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. ஒரு லில்லியம் மலருக்கு 25 ரூபாய் கிடைத்த நிலையில், தற்போது 20 ரூபாய் மட்டும் கிடைக்கிறது. ஒரு ஏசியாடிக் மலருக்கு அதிகப்பட்சமாக 20 ரூபாய் கிடைத்த நிலையில், தற்போது 12 ரூபாய் விலை

கிடைக்கிறது. ஆனால், இவ்வகை பூக்களின் ஒரு விதைக்கு மட்டும் 12 விலை கொடுக்கவேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில்,"விவசாயிகள் கொய்மலருக்காக பெற்ற கடனை திருப்பி செலுத்தவேண்டும்' என, வங்கிகள் கெடுபடி செய்வதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். அதே நேரத்தில், கர்னாடகா மாநிலத்தில், கொய்மலர் சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, பசுமைக் குடிலுக்காக, அம்மாநில அரசு, விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியம் வழங்கி வருகிறது. விவசாயிகள் கூறுகையில்,"பெங்களூரு சந்தையில், கொய்மலர் தேக்கத்தால், நீலகிரி மாவட்ட கொய்மலருக்கு, போதிய விலை கிடைப்பதில்லை. இதனால், பெரும் நஷ்டம் ஏற்படுகிறது' என்றனர். எனவே, மாநில அரசு இதில், உள்ள பிரச்னைகளை ஆய்வு செய்து விவசாயிகளை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி.**

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் நகராட்சி சார்பில், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.காஞ்சிபுரம் நகராட்சி சார்பில், நேற்று, மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து, விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில், நகராட்சி ஊழியர்கள், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தை, மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் துவக்கி வைத்தார்.
இதில், மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த, வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் கையில் ஏந்தியபடி சென்றனர். காமராஜர் சாலை, வணிகர் வீதி வழியாக சென்ற ஊர்வலம், நகராட்சி அலுவலகம் எதிரே உள்ள, அண்ணா அரங்கத்தில் நிறைவடைந்தது. நகராட்சி தலைவர் மைதிலி, ஆணையர் விமலா உட்பட, பலர் கலந்து கொண்டனர்.

**ஒரு மூட்டை பலா கொட்டை ரூ.1,000**

சேந்தமங்கலம்: சோளக்காடு ஏலமார்க்கெட்டில், ஒரு மூட்டை பலா கொட்டை, 600 முதல், 1,000 ரூபாய் வரை விற்பனையானதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். சேந்தமங்கலம் அடுத்த கொல்லிமலையில், அன்னாசி, பலா, கொய்யா போன்ற பழவகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. சீஸனுக்கு ஏற்ப பழவகைகள் அறுவடை செய்து, வாழவந்திகோம்பை பஞ்சாயத்துக்கு உட்பட்ட சோளக்காடு ஏலமார்க்கெட்டில் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். அதன்படி, வாரத்தில் புதன், சனிக்கிழமைகளில், பலாக்கொட்டைகள் ஏலம் நடக்கிறது. இங்கு, நத்துக்குழிக்காடு, கோவிலூர், குழிவளவு, வாழவந்திநாடு, சோளக்காடு போன்ற பகுதிகளில் இருந்து, பலா கொட்டைகள், விற்பனைக்காக ஏலமார்க்கெட்டுக்கு கொண்டு வருகின்றனர். அவற்றை, நாமக்கல், சேலம், திருச்சி, ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வந்து, ஏலம் எடுத்து டெம்போ, லாரிகள் மூலம் கொண்டு சென்று, விற்பனை செய்கின்றனர். இந்த பலா கொட்டைகள், மாவு பொருட்கள் தயாரிக்கவும், பிஸ்கட் தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர். அதனால், சீஸன் நேரத்தில், அதிக அளவில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மூட்டையில், 80 முதல், 100 கிலோ வரை பலா கொட்டைகள் இருக்கும். அதன் விலை, 600 முதல், 1,000 ரூபாய் வரைக்கும் விற்பனையாகிறது.அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது:நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் ஏராளமான பழ வகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. அதில், சுவை மிகுந்த பலாவும் ஒன்று. சீஸன் நேரத்தில் பலா பழத்துக்கு கிராக்கி இருப்பதுபோல், அதன் கொட்டைக்கும் வரவேற்பு உள்ளது. சோளக்காட்டில், வாரம் தோறும் புதன், சனிக்கிழமை பலா கொட்டைக்கு ஏலம் நடக்கிறது.அந்த ஏலத்தில், சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், பலா கொட்டைகளை கொண்டு வந்து குவிக்கின்றனர். நாமக்கல், சேலம், திருச்சி போன்ற பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வந்து ஏலம் எடுத்து, அவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.தற்போது, ஒரு மூட்டை பலா கொட்டைகள், 600 முதல், 1,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டு தோறும் பலா கொட்டைக்கு வரவேற்பு உள்ளது. இந்த விலை,

எங்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**20 ஆண்டுகளாக கந்துவட்டி கொடுமையில் விவசாயிகள்**

சேலம்: ""கருமந்துறையில், 20 ஆண்டுகளாக கந்துவட்டி கொடுமையில் சிக்கி தவிக்கும் விவசாயிகள், மரவள்ளி கிழங்குகளை வட்டிக்கு வெட்டி கொடுக்கும் அவல நிலையில் சிக்கி தவிக்கின்றனர். எனவே, முத்தரப்பு கூட்டம் கூட்டி, மரவள்ளி விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்," என, விவசாயி கோவிந்தசாமி, விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் பேசினார்.

சேலம், கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் கலெக்டர் மகரபூஷணம் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., செல்வராஜ் முன்னிலை வகித்தார்.

ராமநாயக்கன்பாளையத்தை சேர்ந்த விவசாயி சிங்காரம் பேசியதாவது:

இயற்கை முறையிலான விவசாயம் செய்து, காய்,கறிகள் நல்ல மகசூல் பெற்று வருகிறேன். ஆத்தூர் உழவர் சந்தையில் இயற்கை முறையிலான காய்கறிகளை விற்பனை செய்ய, தனி இடம் ஒதுக்கி கொடுக்க மறுக்கின்றனர். சில நாட்களாக உழவர் சந்தையில் இயற்கை முறையிலான காய்கறிகளை விற்பனை செய்ய அதிகாரிகள் மறுத்து வருகின்றனர்.

கலெக்டர் மகரபூஷணம்: இயற்கை முறையிலான விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, உழவர் சந்தையில் விற்பனை செய்திட, வேளாண் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுகிறது.

விவசாயி கோவிந்தராஜ்: பருவநிலை மாற்றத்தால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கான தீர்வு காண வேண்டும். வறட்சி காரணமாக பால் ஊக்க தொகையாக லிட்டருக்கு, 50 காசு வழங்கிய கலெக்டருக்கு நன்றி. இரண்டு மாதமாக இந்த ஊக்க தொகை வழங்கப்படவில்லை. நிலுவை தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில், ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நிலப்பகுதி மட்டுமே கணக்கில் எடுத்து கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டு

இருந்தால், அது சரி அல்ல. எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதியும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.விவசாயி ஜெயராமன் : கரியக்கோவில் அணையில், 11 அடி நீர் மட்டம் உள்ளது. நதியின் ஜீவாதாரத்திற்காக அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவதன் மூலம் அந்த பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர வழி பிறக்கும்.
விவசாயி சின்னசாமி : ஒவ்வொரு கடையிலும் பொருட்களின் விலை மாறுபடுகிறது. மாவட்ட நிர்வாகம் கடைகளில் விலை பட்டியல் வைக்க உத்தரவிட வேண்டும். கலெக்டர் மகரபூஷணம்: நாம் கலப்பு பொருளாதாரத்தில் உள்ளதால், கடைக்கு கடை விலை மாற்றம் இருக்கிறது. ஒரு கடையில் விற்பனை செய்யும் பொருள் தரமானது என்றும், மற்ற கடையில் உள்ள பொருள் தரம் குறைவால் விலை குறைவு என வாதிடுவர். விலை பட்டியல் வைக்க நடவடிக்கை எடுக்க முடியும். இந்த விலையில் விற்பனை செய்ய வேண்டும் என தெரிவிக்க முடியாது.
விவசாயி கிருஷ்ணமூர்த்தி : சேலம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதியை மறு ஆய்வு செய்ய வேண்டும். வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிக்கு நேரில் சென்று அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். கலெக்டர் மகரபூஷணம் : அதிகாரிகள் நேரில் சென்று வறட்சியை ஆய்வு செய்ய வில்லை என்ற கருத்தை ஏற்க முடியாது. சிலர் அவ்வாறு இருக்கலாம். முழு அளவில் ஆய்வு செய்தே அதிகாரிகள் கணக்கிடுகின்றனர். நான் நேரில் பல இடங்களுக்கு சென்று, வறட்சி பணி ஆய்வில் ஈடுபட்டுள்ளேன். 50 சதவீதத்துக்கு மேல் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் ஆய்வு செய்யும்படி, அரசு தெரிவித்தது. மீண்டும் மறுஆய்வு செய்ய அறிவுருத்தப்பட்டதை அடுத்து, மறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.
விவசாயி கிருஷ்ணமூர்த்தி : ஆத்தூர் அடுத்துள்ள தும்பல் பகுதில் ப்ளஸ் 1 மாணவர்கள், வேளாண் சார்ந்த படிப்பில் சேர, கல்வி அலுவலர்கள் சிபாரிசு செய்வதில்லை. மாறாக தொழில் கல்விக்கான ஆசிரியர் பற்றாகுறை, பிற்காலத்தில் வேலை வாய்பு கிடைக்காது என, மாணவர்களிடம் தவறான தகவல்களை பரப்பி வருகின்றனர்.
கலெக்டர் மகரபூஷணம்: கல்வி துறை சார்ந்த அதிகாரிகள் அவ்வாறு தெரிவிக்க வாய்ப்பில்லை. இருப்பினும், மாணவர்கள் எந்த படிப்பில் ஆர்வம் காட்டுகின்றனரோ, அந்த படிப்பில் சேர அவர்களுக்கு உரிமை உண்டு. இதை யாராலும் தடுக்க முடியாது.

விவசாயி கோவிந்தசாமி: கருமந்துறையில் மரவள்ளி விவசாயிகள், 20 ஆண்டுகளாக கந்துவட்டி கொடுமையில் சிக்கி தவிக்கின்றனர். கந்துவட்டி வாங்கிய விவசாயிகள், 20 ஆண்டுகளாக மரவள்ளி கிழங்குகளை வெட்டி, வட்டி கட்டி வரும் கொடுமை நடந்து வருகிறது. மரவள்ளி கிழங்கு விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு காண கலெக்டர் விரைந்து முத்தரப்பு கூட்டம் நடத்த வேண்டும். கலெக்டர் மகரபூஷணம்: இதுசம்பந்தமாக தனியாக வந்து, கந்து வட்டி கொடுமையில் ஈடுபடுபவர்கள் குறித்த தகவல் தெரிவிக்கவும். முத்தரப்பு கூட்டம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடந்தது.

**50 சதவீதம் மானியத்தில் ஜிப்சம்: வேளாண் அதிகாரி**

ராசிபுரம்: "ஐம்பது சதவீதம் மானியத்தில், ஜிப்சம் வினியோகம் செய்யப்படுகிறது' என, புதுச்சத்திரம் வட்டா வேளாண் உதவி இயக்குனர் ராஜகோபால் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
தற்போது, புதுச்சத்திரம் வட்டாரத்தில், மானாவாரி நிலக்கடலை பயிர் பரவலாக விதைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு, சாகுபடி செய்யும் நிலக்கடலை பயிருக்கு, அடி உரமாக ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சம் இட வேண்டும். பின்னர், விதைத்த, 40 நாளில் இருந்து, 45 நாட்களுக்குள், இரண்டாம் களை எடுத்தப்பின், ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சம் இட்டு, மண் அணைக்க வேண்டும்.
அவ்வாறு, நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இடுவதால், தேவையான சுண்ணாம்பு மற்றும் கந்தகச்சத்து கிடைப்பதால், காய்கள் பொக்கு இல்லாமல் திரட்சியாகவும், கூடுதல் எண்ணெய் சத்து மற்றும் அதிக எடையுடன் காய்கள் இருக்கும். விவசாயிகளுக்கு, தேவையான அளவு ஜிப்சம், புதுசசத்திரம் மற்றும் திருமலைப்பட்டி வேளாண் விரிவாக்க மையங்களில், 50 சதவீதம் மானிய விலையில், பெற்றுக் கொள்ளலாம்.
அனைத்து விவசாயிகளும், தங்களது நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இட்டு, கூடுதல் வருமானம் பெற வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

## மின்வாரியத்துக்கு ரூ.964 கோடி கிடைக்கும் விவசாயம், குடிசைக்கான மின்கட்டணம் உயர்ந்தது



சென்னை : விவசாயத்திற்கு மின்கட்டணம் ரூ.1,750 இருந்து ரூ.2,500 ஆகவும், குடிசைக்கான மின்கட்டணம் ரூ.60 இருந்து ரூ.125 ஆகவும் உயர்த்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் ரூ.964 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். தமிழ்நாட்டில் மொத்தம் 2.32 கோடி மின்நுகர்வோர் உள்ளனர். இதில் விவசாயிகளுக்கு 20.35 லட்சம் இணைப்புகள் அளிக்கப்படுகிறது. இதேபோல், குடிசைகளுக்கு 14 லட்சம் மின்இணைப்பு அளிக்கப்படு கின்றன. கடந்த ஆண்டு மார்ச் 31ம் தேதி புதிய மின்கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

இதன் மூலம் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு கூடுதல் வருவாய் ரூ.9,742 கோடி கிடைத்தது. இந்நிலையில் இந்த ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் 19ம் தேதி மின்கட்டணத்தை மாற்றியமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனு அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து உயர்த்த இருந்த மின்கட்டண விகித பட்டியலின் சுருக்கத்தை மார்ச் 2ம் தேதியன்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. பின்னர் மக்களிடம் கருத்து கேட்கப்பட்டது.

இதையடுத்து, மக்களின் கருத்துகள், வாரியத்தின் கட்டண உயர்வு மனு குறித்து மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் முக்கிய கூட்டம் நடத்தப்பட் டது. இந்நிலையில் மாற்றியமைக்கப்பட்ட மின்கட்டணத்தை நேற்று அறிவித்தது. இதுதொடர்பாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் செயலாளர் குணசேகரன் நேற்று வெளியிட்ட அறிக்கை:

மின்வாரியம் தெரிவித்தப்படி, விவசாயத்திற்கான மின் கட்டணம் ஒரு குதிரை திறனுக்கு ரூ.1,750 இருந்து ரூ.2,500 ஆகவும், குடிசைக்கான மின் கட்டணம் மாதத்துக்கு ^60ல் இருந்து ரூ.125 ஆகவும் உயர்த்த வேண்டும். இப்படி மின் உயர்த்தப் படும் முழு கட்டணமும் தமிழக அரசு மானியமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கொடுக்கும் என்று தெரிவித்தை ஏற்றுக் கொண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் தந்துள்ளது.

மேலும், விளம்பர தட்டிகள், விளம்பர பலகை ஆகியவற்றை பயன்படுத்தும்போது, அலங்கார விளக்கை பயன்படுத்துவோர் பிரிவில் சேர்க்கப்படுவார்கள். இவர்கள் யூனிட் ஒன்றுக்கு ரூ.10.50 கட்டணம் செலுத்த வேண்டும். ஏற்கனவே இந்த பிரிவில் இருந்தவர்கள் யூனிட் ஒன்றுக்கு ரூ.5 செலுத்தி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மருத்துவர்கள், வக்கீல்கள் வீட்டில் பயிற்சி எடுக்கும்போது,

அவர்களிடம் வீட்டு இணைப்புக்கான மின்கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. அதன்படி, வீட்டில் மண்பாண்டம் தயாரித்தல், பொற்கொல்லர்களுக்கும் வீட்டில் மின்இணைப்புக்கான கட்டணமே வசூலிக்கப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மொத்தம் ரூ.964 கோடி வருவாய் கிடைக்கும். இந்த புதிய மின்கட்டண முறை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது. இவ்வாறு ஒழுங்குமுறை ஆணையம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வீடு கட்டும் பணிக்கு சலுகை

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, வீட்டு உபயோகம் அல்லது குடியிருப்பு மின்நுகர்வோருக்கு ஆணையம் புதிய மின்கட்டண ஆணையில், அவர்களுடைய குடியிருப்பு இடங்களில் 2,000 சதுர அடிக்கு உட்பட்ட கூடுதல் கட்டுமானப் பணிகளுக்கு உபயோகிக்கும் மின்சாரத்திற்கு வீட்டு உபயோகத்திற்கான மின்கட்டணமே செலுத்துவதற்கு வகை செய்துள்ளது. குடியிருப்போரின் பொதுவசதிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு குடியிருப்பு மின்கட்டணமே விதிக்கப்படும் என்று மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேபோல், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கரும்பு பிழிதல், அறுவடை, புல்வெட்டுதல், கதிரடித்தல் மற்றும் வேளாண் விளைபொருள்களை சுத்தம் செய்தல் ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் மின்சாரத்தை ஒரு வழிப்பாதை மின்இணைப்பு மாற்றி மூலம் விவசாயிகள் பயன்படுத்துவதற்கும் வழிவகை செய்துள்ளது. இதனால் இனி விவசாயிகள் மீது மின்திருட்டு வழக்கு பதிவு செய்ய முடியாது.

**வட மாநிலங்களில் மழையால் லாரி போக்குவரத்து பாதிப்பு தேயிலை தூள் விலை சரியும் அபாயம்**



குன்னூர் : வட மாநிலங்களில் கனமழை காரணமாக லாரி போக்குவரத்து தடைபட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலைத் தூள் ஏல மையங்கள் மூலமாகவும், நேரடியாகவும் விற்கப்பட்டு வருகிறது. அதில் வட மாநில வர்த்தகர்களின் பஙகளிப்பு ஒவ்வொரு வாரமும் அதிகளவில்

காணப்படும். இதன் காரணமாக குறைந்தபட்சம் 60 சதவீத தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் தேயிலைத் தூள் லாரிகள் மூலம் வட மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. கடந்த சில நாட்களாக இமாச்சல பிரதேசம், உத்தரகண்ட், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் கனமழை பெய்து வருவதுடன் நிலச்சரிவு போன்ற பாதிப்புகள் ஏற்பட்டு போக்குவரத்து வெகுவாக பாதிக்கப் பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் இயல்பு வாழ்க்கையும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தேயிலைத் தூள் பாதி வழியிலேயே லாரிகளில் தேங்கி கிடக்கின்றன. மேலும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு சென்ற வாகனங்களும் திரும்பாததால் தேயிலைத் தூளை எடுத்து செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மழை தொடரும் பட்சத் தில், இங்குள்ள ஏல மையங்களில் தேயிலைத்தூளின் விற்பனை சரியும் அபாயம் ஏற்படும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளதன் காரணமாக வர்த்தகர்கள் போட்டி போட்டுக் கொண்டு கொள்முதல் செய்து வந்த நிலையில் வரும் வாரங்களில் இந்நிலை நீடிக்குமா என்று கேள்விக்குறி எழுந்துள்ளது.

**இந்திய உணவு கழகத்தின் 1 கோடி டன் உணவு தானியம் வெளிச்சந்தையில் விற்க அனுமதி**



புதுடெல்லி : இந்திய உணவு கழகத்திடம் உள்ள 1.05 கோடி டன் உணவு தானியங்களை வெளிச்சந்தையில் விற்க பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு நேற்று அனுமதி அளித்தது. இதன் மூலம் அரசுக்கு மானியமாக ரூ.5,491 கோடி செலவாகிறது. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு நேற்று கூடி விவாதித்தது. பின்னர் உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியதாவது:

உணவுப் பொருட்களின் சில்லரை விலையை கட்டுப்படுத்த 1 கோடி டன் கோதுமை, 5 லட்சம் டன் அரிசி ஆகியவற்றை வெளிச்சந்தையில் விற்க முடிவு செய்யப்பட்டது. 1 கோடி டன் கோதுமையில் 85 லட்சம் டன் பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களைச் சேர்ந்த மொத்த வாடிக்கையாளர்களுக்கு குவிண்டால் ரூ.1,500 விலையில் விற்கப்படும்.

இந்திய உணவு கழகம் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறு வணிகர்களுக்கு 10 லட்சம் டன் கோதுமை வழங்கப்படும். பல்வேறு மாநிலங்களில் உள்ள சில்லரை வாடிக்கையாளர்களுக்காக 4 லட்சம் டன் வழங்கப்படும். கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு ஒரு லட்சம் டன் வழங்கப்படும். இதுமட்டுமின்றி சில்லரை வாடிக்கையாளர்களுக்காக குண்டால் ரூ.1,875 விலையில் 5 லட்சம் டன் அரிசியையும் வழங்க கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு தாமஸ் கூறினார்.

பொதுத்துறை ஏற்றுமதி நிறுவனங்கள் மூலம் 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும் திட்டம் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை. உணவு தானியங்களை வெளிச்சந்தையில் விற்கும் அரசின் முடிவால் கோதுமை, அரிசி ஆகியவற்றின் சில்லரை விலை குறைய வழி ஏற்பட்டுள்ளது. அதே சமயத்தில் ஏற்றுமதி தேவையை சமாளிக்க தனியார் வர்த்தகர்கள் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட கூடுதலாக கொடுத்து உணவு தானியங்களை விவசாயிகளிடமிருந்து வாங்கும் நிலை ஏற்படும் என்று வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பெரம்பலூர் மாவட்டத்தில் 1,400 விவசாயிகளுக்கு தீவனம் உற்பத்தி செய்ய ரூ.42 லட்சம் மானியம் கலெக்டர் தகவல்**

பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட் டத்தில் மாநில அரசின் தீவனப் பயிர் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 1,400 விவசாயிகளுக்கு தீவனம் உற்பத்தி செய்ய மானியமாக ரூ.42 லட்சம் வழங்கப்பட உள்ளதுஎன்ற மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்தார்.

விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர்.தரேஸ் அஹமது. தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விவசாயிகள் நில ஆக்கிரமிப்பு, பாசன வாய்க்கால்களை சீரமைத்தல், குளங்களை ஆழப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட கலெக்டரிடம் அளித்தனர். இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பேசுகையில் தெரி வித்ததாவது:

ரூ.42 லட்சம் மானியம்

கால்நடைத்துறையின் மூலம் மாநில அரசின் தீவனப் பயிர் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரு கின்றது. இத்திட்டத்தின் கீழ் 1,400 விவசாயிகள் தீவனப்பயிர் உற்பத்தி செய்ய மானியம் வழங்குவதற்காக பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.42 லட்சம் பெறப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தீவனப் பயிர் உற்பத்தி செய்ய உழவு பணி, நடவு களை எடுத்தல் பணி, விதை செலவு, உரம் செலவு ஆகியவற்றிற்காக ஒரு விவசாயிக்கு ரூ.3,000 மானியம் வழங்கப்பட உள்ளது.

நிபந்தனைகள்

இத்திட்டத்தின்கீழ் பயன டைய விவசாயிகள் பாசன வசதியுடைய 0.25 ஏக்கர் நிலம், 2 மாடுகள், ஆகியவை 3 ஆண்டுகளுக்கு மேல் வைத் துள்ளவராகவும், இத்திட்டத் தின் கீழ் ஏற்கனவே பயன் பெறாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் பாசன வசதிக்காக மழைத் தெளிப்பான் (ரெயின் கன்)பெறவும் மானியம் வழங்கப்படுகிறது. மழைத் தெளிப்பானின் மொத்த விலையான ரூ.25ஆயிரத்தில் பயனாளியின் தொகையான ரூ.6 ஆயிரத்து 250 போக மீதம் 75 சதவீத அரசு மானியமாக ரூ.18 ஆயிரத்து 750 அளிக்கப் படும். எனவே தகுதியுடைய விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தீவனப்புல் உற்பத்தி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரி வித்தார்.

கூட்டத்தில் இணை இயக் குநர் (வேளாண்மை) சங்கர லிங்கம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, துணை இயக்குநர் (தோட்டக் கலை) (பொறுப்பு) இந்திரா, உள்பட விவசாயத் துறை அலுவலர்கள், அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சொட்டுநீர் பாசன திட்டம் அமைக்கும் விவசாயிகளுக்கான சிறப்பு முகாம்**

அரியலூர்,

சொட்டு நீர் பாசன திட்டம் தேவைப்படும் விவ சாயிகளின் விவரங் களை சேகரிக்கும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது என்று கலெக்டர் ரவிகுமார் தெரிவித்துள் ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறி இருப்ப தாவது :

<u>நீர் சிக்கனம்</u>

இன்று நாளுக்கு நாள் நீர்த்தேவை அதிகரித்து வரும் நிலையிலும், நீர்வளம் குறைந்து வரும் நிலையிலும் சிக்கனமாக நீரைப் பயன் படுத்தி வருங்காலத் தலை முறைக்கு வளமான நீர் வளத்தை விட்டுச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இந்நிலையில் விவசாயத்தில் சிக்கனமாக நீரை செலவு செய்து இருமடங்கு உற்பத்தி யும், மும்மடங்கு வருமானமும் பெற தோட்டக்கலைத்துறை மூலம் காய்கறி பயிர்கள், மலர் கள், பழப்பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயி களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து தரப்படுகிறது.

நன்மைகள்

சொட்டுநீர்ப்பாசனம் அமைப்பதன் மூலம் குறைந்த நீரைக் கொண்டு அதிகப் பரப்பில் பயிர் செய்யலாம். 75 சதவீதம் நீரை சேமிக்கலாம். குறைந்த செலவில் அதிக லாபம் கிடைக்கும். பயிர் திட மாகவும் ஆரோக் கியமாகவும் வளர்வதோடு வேகமாக முதிர்ச்சி யடையும். தண்ணீரில் கரையும் உரங் களை நேரடியாக பயிருக்கு வேர்ப்குதியிலேயே வழங்க லாம். களை எடுக்கும் செலவு குறைவு. தரமான விளை பொருள் களுடன் அதிக விளைச்சல் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு மானியம்

சொட்டுநீர்ப்பாசன திட்டத் தின் மூலம் சிறு/குறு விவ சாயிகளுக்கு அவர்தம் நிலங் களில் சொட்டுநீர் அமைக்க 100 சதவிகித மானியமும் இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்தில் 12.5 ஏக்கர் வரையும் வழங்கப்படுகிறது. எனவே சொட்டு நீர்ப்பாசன திட்டத்தினை விவசாயி களின் மத்தியில் விரைவாக கொண்டு செல்லும் பொருட்டு அரிய லூர் மாவட்டத்தில் அரியலூர், திருமானூர், தா.பழூர், செந்துறை, ஜெயங் கொண்டம் மற்றும் ஆண்டிமடம் ஆகிய தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் 24.06.2013 முதல் 28.06.2013 வரை சொட்டுநீர் பாசன திட்டம் தேவைப்படும் விவசாயி களின் விவரங்களை சேகரிக்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

வேண்டுகோள்

எனவே, சொட்டுநீர் பாசன அமைப்பு தேவைப்படும் விவசாயிகள் நில ஆவணங் களுடன் சம்பந்தப்பட்ட தோட்டக் கலை உதவி இயக்கு நர் அலுவலகங்களில் நடை பெறும் இச்சிறப்பு முகாமினை பயன் படுத்தி தங்களது பெயரை பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்டவாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்: குஜிலியம்பாறையில் 2 ஆயிரம் ஏக்கரில் தொழில்பேட்டை அமைக்கப்படும் கலெக்டர் வெங்கடாசலம் தகவல்**

திண்டுக்கல்

குஜிலியம்பாறை பகுதியில் 2 ஆயிரம் ஏக்கரில் அமைய இருக்கும் தொழிற்பேட்டையில் மக்கள் விரும்பும் தொழிலுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

குறைதீர்க்கும் கூட்டம்

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் மனோகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கார்த்திகேயன், வேளாண்மை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, பொதுப்பணி துறை செயற்பொறியாளர் செந்தில்வேலன் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்திருந்த விவசாயிகள் கோரிக்கை மனு கொடுத்தனர். கடந்த மாதம் நடந்த கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது விவாதம் நடைபெற்றது. முன்னதாக விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் விவரம் வருமாறு:–

மானியம் எப்போது?

சாணார்பட்டி ஒன்றியத்தில் புலவன்குளம் உள்பட 10 கண்மாய்கள் உள்ளன. இந்த கண்மாய்களின் மதகுகள் அனைத்தும் பழுதடைந்து விட்டன. பருவமழை காலத்தில் தண்ணீர் பழுதான மதகுகள் வழியாக வீணாகும் வாய்ப்பு உள்ளது. எனவே, கண்மாய் மதகுகளை சரிசெய்ய வேண்டும்.

கூட்டுறவு சங்கத்தில் மானியக்கடன் பெற்றவர்கள் முழுமையாக கட்டி முடிக்கும் நிலையிலும், இதுவரை மானியம் வழங்கப்படவில்லை. எனவே, உடனடியாக மானியம் வழங்க வேண்டும்.

குஜிலியம்பாறை புங்கம்பாடியில் பண்ணைக்குட்டை அமைப்பதற்கு அதிகாரிகள் வந்து ஆய்வு செய்து விட்டு சென்றார்கள். அதன்பின்னர் குட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. பரப்பலாறு அணை பகுதியில் உள்ள வண்டல் மண்ணை அள்ளுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

வறட்சி நிவாரணம்

தென்னை, மா மரங்கள் வறட்சியால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, தென்னை, மா, விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

பாளையம் பேரூராட்சியில் 10 கண்மாய்களும் மோசமான நிலையில் உள்ளன. மழை பெய்து தண்ணீர்வந்தால் வீணாக வெளியேறி விடும். எனவே, கண்மாய்களை உடனடியாக சீரமைக்க வேண்டும்.

வறட்சி நிவாரணம் பெறுவதற்கான சான்று வாங்க சென்றால் அதிகாரிகள் கடுமையான கெடுபிடி செய்கிறார்கள். பழனி கோம்பைபட்டி ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டும். இதன் மூலம் விவசாய கிணறுகளில் நீர்மட்டம் உயரும்.

மேற்கண்டவை உள்பட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்து கலெக்டர் வெங்கடாசலம் பேசியதாவது:–

தென்னை, மா கணக்கெடுப்பு

மாவட்டம் முழுவதும் கண்மாய்களில் பழுதடைந்து காணப்படும் மதகுகளை சரிசெய்து, மழைகாலத்தில் தண்ணீரை தேக்கி வைக்கப்படும். பரப்பலாறு அணையில் விவசாயிகள் வண்டல் மண் அள்ளுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.

வறட்சி நிவாரணத்தொகையான ரூ.54 கோடியில் இதுவரை ரூ.34 கோடி அளவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் ரூ.20 கோடி இருக்கிறது. தென்னை, மா, கரும்பு பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் வாய்ப்பு உள்ளது.

எனவே, கிராம நிர்வாக அலுவலர்கள் புதிய அடங்கல் எழுத வேண்டும். விவசாயிகளின் மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும். வறட்சி பாதித்த விவசாயிகளின் மனுக்கள் மீது விசாரணை நடத்தி ஒரு வாரத்திற்குள் தாசில்தார்கள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ரூ.22 லட்சம் ஒதுக்கீடு

அதேபோல் 727 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள மல்பெரி பயிர்கள் 50 சதவீதம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. 450 விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர். வறட்சி நிவாரணத்தொகையாக தலா ரூ.3 ஆயிரம் வீதம் ரூ.22 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குஜிலியம்பாறை பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு நிலம் தேர்வு செய்யப்பட இருக்கிறது. இதில் மக்கள் விரும்பும் தொழில்களை மையமாக கொண்டு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். எனவே, அந்த பகுதி மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் பேசினார்.

**நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 28ந் தேதி நடக்கிறது**

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் மாதந்தோறும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு, விவசாயிகளின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி இந்த மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 28ந் தேதி (வெள்ளிக்கிழமை) முற்பகல் 10.30 மணி அளவில் நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.இந்த கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் ஜெகநாதன் தலைமை தாங்கி, விவசாயிகளின் குறைகளை கேட்க உள்ளார். எனவே நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.